# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## ஜனவரி 2021(மடல் - 21) செய்தி-1

**"கர்த்தர் தாமே உனக்கு முன்பாக போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" (உபா. 31:8).**

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| Youth Corner | 16 |
| வேத வினாக்கள் | 18 |
| கோதுமை மணி | 21 |
| துணுக்குகள் | 23 |
| ஆலய பக்கம் | 26 |


கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். எரேமியா 17:7

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**"கர்த்தர் தாமே உனக்கு முன்பாக போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" (உபா. 31:8).**

இந்த புதிய ஆண்டில் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்படி இந்த வாக்குத்தத்தத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் ஆண்டவர் நாமத்தை துதிப்போம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு செல்ல மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அதை சுதந்தரித்துக் கொள்வதற்கு யோர்தான் தடையாக கரைபுரண்டு ஓடுகின்ற நிலை இருந்தது. பல்வேறு விதமான எதிர்பார்ப்பு மக்களிடையே இருந்தது. ஒரு புறத்தில் தலைமைத்துவத்தில் மாற்றம், மறுபுறத்தில் மக்களை வழிநடத்துவதில் சவால். இந்த குழப்பங்கள் மத்தியிலே இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்டது இந்த வாக்குத்தத்தம்.

இன்றைக்கு புதிய ஆண்டிற்குள்ளாக கடந்து செல்கின்ற நமக்கு பல்வேறுபட்ட 1. தடைகள், 2. எதிர்பார்ப்புகள், 3. எதிர்ப்புகள் இருக்கின்றன.

### *1. கர்த்தர் தாமே உனக்கு முன்பாக போகிறவர்*

இந்த புதிய ஆண்டில் கர்த்தர் தாமே நமக்கு முன்பாக போகின்றவராக இருக்கிறார்.

தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர்கள் முன்னால் நடந்துபோவார் (மீகா 2:13).

இந்த புதிய ஆண்டிலே எப்பேர்பட்ட தடை வந்தாலும் அதை ஆண்டவர் நீக்கி போடுவார். அவருக்கு நாம் பின் செல்வோம்.

### *2. அவர் உன்னோடே இருப்பார்*

ஆபிராகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, யோசுவா இவர்களோடிருந்த ஆண்டவர், புதிய ஏற்பாட்டில் இம்மானுவேலராக கூட இருக்கின்ற ஆண்டவர். அவர் நம்மோடு எப்போதும் இருப்பார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் (சங்.23:4).

ஆண்டவர் நம்மோடு கூட என்றென்றும் இருக்கிறார். அவரது இருப்புநிலையை நாம் உணர்ந்து அவரது உறவில் பலப்பட வேண்டும்.

***3. அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை***

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன். என்றென்றைக்கும் உங்களோடு கூட இருக்கும்படியாக சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

***4. பயப்படவும், கலங்கவும் வேண்டாம்***

நாம் ஆண்டவருக்கு பிரியமாய் வாழ்ந்தால், யோசுவாவோடு கர்த்தர் இருந்தது போல நம்மோடும் இருந்து நம்மை காத்து ஆசீர்வதிப்பார்.

இந்த புதிய ஆண்டில் பிரவேசித்திருக்கிற நம்மோடு கூட ஆண்டவர் இருந்து புதிய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தந்து நம்மை வழிநடத்துவாராக. கர்த்தருடைய வசனத்தின்படி நடப்போம். கர்த்தருக்காக பிரயோஜனமாய் வாழ்வோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
***அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.*** C



## அழகு பெண்ணே உனக்காக......

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரலே 2021-ம் ஆண்டிற்கான அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு எல்லாவற்றிலுமிருந்து நம்மை காத்த, வழிநடத்திய, முன்சென்ற ஆசீர்வதித்த நம் அன்பருக்கு முழுமனதோடு குடும்பமாக நன்றி செலுத்துவோமாக.

இம்மாத முதல் இந்த தூது இதழ் வழியாக "அழகு பெண்ணே உனக்காக" என்ற தலைப்பின் கீழ் திருமறையின் அடிப்படையில் சில காரியங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தில் அழகு என்ற வார்த்தைக்கு ஒரு பிரத்தியேக இடம் கிடைத்துவிட்டது. உடையானாலும் சரி, பொருளானாலும் சரி, இடமானாலும் சரி அழகிற்கு இடமில்லாமல் இல்லை, பெண்கள் இயற்கையில் அழகானவர்கள்தான். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதத்தில் பார்ப்பதற்கு அழகாய்த்தான் தெரிகிறாள்.

வேதத்தில் ஆதியாகம் முதலாம் அதிகாரத்தில், தேவனாகிய கர்த்தர் தான் சிருஷ்டித்த ஒவ்வொன்றையும் பார்த்து நல்லது என்று கண்டார். மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்டுகொண்ட தேவனாகிய கர்த்தர் பெண்ணைப் படைத்தார். இதுவரை நல்லது என்று கண்டவர் பெண்ணை படைத்து முடித்ததும் இப்பொழுது மிகவும் நல்லது என்று கண்டாராம்.

"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி ஆறாம் நாளாம் ஆயிற்று" (ஆதி. 1:3).

வேதம் பெண்களை எப்படி வர்ணிக்கிறது, "நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்" (சங். 66:13).

அது மட்டுமல்ல பிரியமானவர்களே, நாம் ஞானமாய் நடப்பதே நம் அழகைக் கூட்டிக் காண்பிக்கும்.

"மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்கு சமானம்" (நீதி.11:22).

நம் ஆண்டவர் அவது சாயலிலும், ரூபத்திலுமே நம்மை உண்டாக்கினார். ஆதலால் நம் அழகைக் காணவும் விரும்புகிறார். புற அழகு, அக அழகு என்று இரண்டு உண்டு. இரண்டும் தேவையே. புற அழகுக்கு முக்கியத்துவம் கொடுப்போர் அக அழகிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதி.31:30).

கர்த்தருக்குப் பயப்படும்போது ஜென்ம சுபாவம் மாறுகிறது. ஆவியின் கனிகள் நம்மில் அலங்கரிக்கப்படுகிறது. ***ஞானம் நம் உடையாய் மாறும். கர்த்தரின் பிரசன்னம் முகக் கலையை உண்டுபண்ணும் கிரீடம் ஆகிறது. நற்கிரியைகள் ஆபரணங்களாய் மாறுகிறது. இவ்விதமான அழகு அழியாது. மங்காத அழகும் கூட.*** நாம் இந்த அழகிற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

அழகான நம் நேசர், நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? அவர் விரும்பும் மேலான அழகை நாடுங்கள். நமக்கு உதவி செய்ய, நம்மை சத்தியத்திற்குள் வழிநடத்தி, நம்மை வழிநடத்த நம் பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துவாராக.

இனிவரும் மாதங்களில் தூது இதழ் மூலமாக அநேக காரியங்களைக், குறித்து தியானிப்போம். இந்த புத்தாண்டு அனைவருக்கும் ஆசீர்வாதமானதாக, சமாதானம் நிறைந்ததாயும், அழகான ஆண்டாகவும் அமைய வாழ்த்துக்கள்!

- தொடரும்

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
**திருமதி. *ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

# எசேக்கியாவின் நம்பிக்கை

முற்றிலும் எதிர்பாராத, ஒரு வித்தியாசமான, இக்கட்டான 2020-ம் ஆண்டைக் கடந்து புதிய ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கிறோம். கடந்து வந்த பாதையை நோக்கும்போது, இது எப்படி இருக்குமோ, எப்போது இந்த நெருக்கடியான சூழ்நிலை மாறுமோ என்ற ஒரு கலக்கம் ஒருவேளை நமக்குள் இருக்கலாம். நெருக்கடியான சூழ்நிலையை தன் வாழ்வில் சந்தித்தபோது, எசேக்கியா அதை எவ்வாறு மேற்கொண்டார் என்று சற்று சிந்திப்போம்.

### *தேவனைச் சார்ந்து வாழ்ந்த எசேக்கியா*

எசேக்கியா தன் 25-ம் வயதில், யூதாவின் 12-ம் ராஜாவானான். இவன் ஆகாசின் மகன். ஆகாஸ் கர்த்தருக்கு முன்பாக பொல்லாப்பானவைகளை செய்து வந்தாலும், எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக செம்மையானவைகளை செய்து வந்தான். மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டிபோட்டான். மோசே செய்த வெண்கல சர்ப்பத்திற்கு ஜனங்கள் தூபங்காட்டி வந்ததால் அதை உடைத்துப் போட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்கு பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை என்று வேதம் கூறுகிறது (2ராஜா.18:4). அந்த நம்பிக்கையே அவன் கர்த்தரை விட்டு பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ உதவியது (2ராஜா.18:5). அப்படி கர்த்தரைச் சார்ந்து வாழ்ந்ததினால் கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று.



- கர்த்தரை சார்ந்த வாழ்ந்து, அவருடைய அனுகூலத்தைப் பெற, கர்த்தருடைய இடத்தை ஆக்கிரமித்துள்ள காரியங்கள் (விக்கிரகங்கள்) நம் வாழ்விலிருந்து தகர்க்கப்படவேண்டும்,

### *நம்பிக்கையில் தடுமாற்றம்*

பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து அவர்களைத் தோற்கடித்தான். அசீரியா ராஜாவுக்கு எசேக்கியா அடிபணியவில்லை. எசேக்கியாவின் ஆறாம் வருஷத்தில் சமாரியா பிடிபட்டது. அசீரியா ராஜா இஸ்ரவேலை சிறைபிடித்துக்கொண்டுபோனான். பின்னர் எசேக்கியாவின் பதினாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்து அவைகளைப் பிடித்தான். கர்த்தரை நம்பி வாழ்ந்த எசேக்கியா தடுமாறி விட்டான். அசீரியா ராஜவையும், அவனுடைய பலத்தையும் குறித்து ஏற்பட்ட பயத்தினால், தான் சுமத்த வேண்டிய, அதாவது கப்பம் கட்ட வேண்டிய காரியங்களை நான் செய்து விடுகிறேன் என்று சொல்லி, கர்த்தரின் ஆலயத்திலும், அரண்மனை பொக்கிஷத்திலுமிருந்து பொன்னையும் வெள்ளியையும்

கொடுத்தான் (2ராஜா.18:15,16). ஆனால் அது அசீரியா ராஜாவை திருப்திபடுத்தவில்லை. பின்னும் எசேக்கியா ராஜா, அக்காலத்தில் பலத்திருந்த எகிப்து ராஜாவின் உதவியை நாடியது அசீரியா ராஜா அனுப்பிய ரப்சாக்கே பேசுவதில் இருந்து தெரிய வருகிறது. எகிப்தின் துணையும் அசீரியா ராஜாவை எதிர்க்க போதவில்லை.

- நம்மை பயமுறுத்தும் காரியங்கள் நம்மை நோக்கி வரும்போது, நம் சுயபுத்தியினால் அதற்கு வழி தேடினால் அது வெற்றியாக முடியாது.

### *நம்பிக்கையின் நங்கூரத்திடம் சரண்*



எசேக்கியா கர்த்தரிடம் கொண்டிருந்த நம்பிக்கையை அறிந்திருந்த அசீரியா ராஜா, எசேக்கியா உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்; அவன் உங்களை தப்புவிக்க மாட்டான் என்று இழிவாகப் பேசுகிறான். தன் அதிகாரிகள் மூலம் அவ்வார்த்தைகளைக் கேட்ட எரேமியா தன் வஸ்திரங்களை கிழித்து, இரட்டுடுத்தி, கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறான். தன் பொன்னோ, பொருளோ, தன் நண்பனின் படைபலமோ தன்னை எதிரியினிமிருந்து காக்க முடியாது, கர்த்தர் மட்டுமே விடுவிக்க முடியும் என்பதை உணர்ந்து ஏசாயாவுக்கு ஆள் அனுப்புகிறான். ஏசாயா மூலம் கர்த்தர் யூதாவுக்கு தரும் நல்ல செய்தி கிடைக்கிறது (2ராஜா.19:6,7). அதன்படி அசீரியா ராஜா திரும்பும்படி நேரிட்டாலும், அவன் போகுமுன், நான் திரும்ப வந்து உன்னை சங்கரிப்பேன் என்று தன் சேனையின் பலத்தை குறித்து மிகவும் அகங்காரமாய் கூறியதோடு, உன்னதமான தேவனை நிந்தித்து நிருபத்தை அனுப்பினான். நிருபத்தை பெற்ற எசேக்கியா அதை கர்த்தருடைய ஆலயத்தில், கர்த்தருக்கு முன்பாக விரித்து, கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணினான் (2ராஜா. 19:14-19). கர்த்தர் ஏசாயா மூலம் விண்ணப்பத்திற்கு பதில் அனுப்புகிறார். அதன்படி கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அசீரியா ராஜாவும் கொல்லப்பட்டான். எசேக்கியா ராஜாவும், யூதா ஜனங்களும் காக்கப்பட்டார்கள்.

- நமக்கு வாழ்வில் நேரிடும் சவால்களை நாம் கர்த்தருடைய பாதத்தில் முழு நம்பிக்கையோடு வைத்து விண்ணப்பம் பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய தூதர்களைக் கொண்டு நம்மை பாதுகாத்து, நமக்காக யுத்தம்பண்ணுவார்.

இந்த புதிய ஆண்டில் நம்முடைய நம்பிக்கை நம் உயிருள்ள ஆண்டவரிடம் இருக்குமாயின் நாம் எதைக் குறித்தும் கலங்கவேண்டியதில்லை. 2 ராஜா.19:29-ல் கூறுகிறபடி நம்முடைய கைகளின் கிரியைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

**ஜெபசீலி ஆசீர்**

## புதிய நம்பிக்கை
## விடா முயற்சியுடைய விதவை *(லூக்கா 18:1-8)*

இந்த வருடம் முழுவதும் நம்மைக் காத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த வருடத்தில் அநேக காரியங்களுக்காக ஜெபித்து சோர்ந்து போயிருப்போம். சோர்ந்து போகாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதற்காக இந்த விதவையைக் குறித்து இந்த மாதத்தில் பார்ப்போம். இவளது பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஒரு நியாதிபதி அறிமுகப்படுத்தப்படுகிறான். அவன் தேவனுக்கு பயப்படாதவன், நேர்மையற்றவன், உடன் மனிதர்களை மதிக்காதவன். இவன் வாழ்ந்த பட்டணத்தில் தான் இந்த விதவையும் இருந்தாள். இவளுக்கு யாரும் உதவாத பட்சத்தில் தனக்கு நியாயம் செய்யும்படி நியாயாதிபதியைத் தேடிப் போனாள். தனக்கும் தன் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் நியாயம் பண்ணும்படி விண்ணப்பம் பண்ணினாள். ஆனாள் அவனுக்கு தேவனுக்கு பயப்படாதவனாயிருந்ததினால் அவளுக்கு நியாயஞ்செய்ய முன்வரவில்லை. இந்த விதவை இதினிமித்தம் சோர்வடையவில்லை. அவன் மீது கோபப்படவுமில்லை, எரிச்சல் அடையவுமில்லை. நாட்கள் கடந்தது. அவள் நியாயம் கிடைக்கும் வரை மன்றாடி கேட்டாள்.

அவன் இந்த விதவை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறாள். இவளுக்கு நியாயஞ் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அவளுக்கு ஆதரவாக தீர்ப்பு கிடைத்தது.

இந்த விதவையின் இடைவிடாத வேண்டுதல் கேட்கப்பட்டது. புது நம்பிக்கை பிறந்தது நாம் எதிர்பார்க்கிற பதில் எதிர்பார்க்கிற நேரத்தில் வரவில்லையென்றால் சோர்ந்துபோய், ஜெபத்தையும் நிறுத்தி விடுகிறோம். பவுல் சொல்கிறார், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று. நாம் ஆண்டவரிடம் விடாப்பிடியோடு, நம்பிக்கையோடு, உறுதியான மனப்பான்மையோடு தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து அந்த நியாதிபதி தனக்குள் சொன்னதை சிந்தித்துப் பாருங்கள் என்று சீஷர்களுக்கு சொன்னது போல நம்மையும் சிந்திக்கச் சொல்கிறார். அந்த நியாயாதிபதி போல நமக்கும் ஒரு நியாதிபதி இருக்கிறார். அவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் அநீதியான நியாதிபதி அல்ல, நீதியாய் நியாயம் செய்கிற தேவன். தகப்பனைப் போல அன்பு மிக்கவர். விதவையின் விடாபிடியான, இடைவிடாத முயற்சி அநீதியுள்ள நியாதிபதியைச் செயல்பட வைத்தது. அநீதியுள்ள நியாதிபதியே விதவைக்கு இரங்க கூடுமானால் நீதியுள்ள நியாதிபதியாய் நம் தேவன் நிச்சயமாய் நம் விண்ணப்பத்திற்கு செவி கொடுப்பார். நம்பிக்கையுடன் இருப்போம். புது வருடத்தை புதிய நம்பிக்கையோடு தொடங்குவோம்.

இந்த உவமையை முடிக்குமுன் இயேசுகிறிஸ்து மனுஷகுமாரன் திரும்ப வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ? என்ற கேள்வியை எழுப்பினார். விதவைக்கு நியாயம் கிடைக்கும் என்ற விசுவாசம் இருந்தது. அப்படிப்பட்ட விசுவாசத்தையே மனுஷகுமாரன் நம்மில் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவர் நியாயம் செய்கிறவர், ஜெபத்திற்கு பதில் தருகிறவர், விடுவிக்கிறவர், கைவிடாதவர், நம்மை பலப்படுத்தி தூக்கி எடுக்கிறவர். இப்படி அவரை விசுவாசித்து புது நம்பிக்கையோடு இரவும் பகலும் கூப்பிடுகிற நமக்கு நிச்சயமாக பதில் தருவார். என்ன நடந்தாலும் நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் நிச்சயமாக நமக்கு உதவி செய்வார் என்ற நம்பிக்கையோடு சோர்ந்துபோகாமல் ஜெபிக்க கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், நம் நம்பிக்கைகளை கனப்படுத்துகிற ஆண்டவர் நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாய் செய்வார். 2021 புதிய வருடம் ஆசீர்வாதமாக அமைய தொடர்ந்து ஜெபிப்போம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## பிப்ரவரி மாத தலைப்பு

# நன்றி படைப்பு

# CHILDREN'S CORNER

Dear Children,

A warm welcome to the New Year 2021. The start of the New Year is a time to reflect on the year just past and make plans for the future.

The past year has been a year of challenges and trials. It has been a year of unexpected situations and major adjustments to our routine life. The biggest has been the outbreak of the "PANDEMIC", the frightening COVID-19. All of you had to spend most of the year confined inside your house. No schools, no playing outside, going to park, beaches, shopping etc. You would have felt as if life in all its fullness had just STOPPED.

The bible says in 1 Thessalonians 5:18, "Give thanks in all circumstances, for this is the will of God in Christ Jesus for you." Let us take a minute to read James 1:2; "Count it all joy, my brothers, when you meet trials of various kinds."And so dear children, it is God's will for us to be joyful in all circumstances. We must always count our blessings. Even though you would have missed out the school and meeting your friends, you had the blessing of spending more time with your parents, brothers and sisters at home. You all would have had lunch together, played a lot of games, watching TV together: all of which you would not have done on normal day. Therefore be always thankful to God.

Our God has so faithfully guided and protected us in this difficult time and as we embark on the New Year 2021, I pray that God's choicest blessings be showered upon everyone. Let us walk with ever present confidence that this New Year will be a year of peace, hope and happiness. When you prayerfully face any situation, your dreams will turn into a reality and you can be successful in everything.

And kids remember when the going gets tough, when you are walking through uncertain and anxious circumstances, our hope lies in the one true God, The Lord and Savior Jesus Christ, who makes all things beautiful in His time.

Happy New Year to all children. God bless you.

**Jansi Aunty**

# Naaman Healed of Leprosy



So Naaman went down to the Jordan River and dipped himself seven times, as the man of God had instructed him. And his skin became as healthy as the skin of a young child's, and he was healed! 2 Kings 5:14

Choose the word that best matches the definition. Answers can be found in 2 Kings 5:1-14

___1. How Naaman felt when he was told what to do
A. sad B. happy C. angry D. tired

___2. The one who told Naaman's wife about the prophet
A. a girl B. a king C. a soldier D. a prophet

___3. How Naaman looked after dipping in the Jordan
A. muddy B. clean C. wrinkled D. old

___4. The country where Naaman went for healing
A. Syria B. Israel C. Aram D. Egypt

___5. The number of times Naaman was told to dip
A. three B. five C. seven D. ten

___6. The person Naaman first went to for healing
A. a girl B. Elisha C. a soldier D. the king

___7. The prophet who told Naaman what to do
A. Elisha B. Moses C. Isaiah D. Elijah

___8. The river where Naaman was told to dip
A. Nile B. Jordan C. Abana D. Pharpar

___9. The disease that Naaman had
A. leprosy B. measles C. cancer D. acne

___10. Someone who serves in the army
A. king B. soldier C. prophet D. girl

Elisha with Naaman

1. Was the king of Israel upset when he read the letter about Naaman?







2. Where did Elisha tell Naaman to wash?










3. How many times was Naaman supposed to dip into the water?










4. How did Naaman feel about what he was told to do?










5. Was Naaman cured by doing exactly what Elisha said to do?







**You are to give him the name Jesus. Matt. 1:21b**

# Naaman Healed of Leprosy



So Naaman went down to the Jordan River and dipped himself seven times, as the man of God had instructed him. And his skin became as healthy as the skin of a young child's, and he was healed! 2 Kings 5:14

Based on 2 Kings 5:1-14



ACROSS

1. The river where Naaman was told to dip
6. The one who told Naaman's wife about the prophet
7. Someone who serves in the army
8. The country where Naaman went for healing
9. How Naaman looked after dipping in the Jordan

DOWN

2. How Naaman felt when he was told what to do
3. The disease that Naaman had
4. The prophet who told Naaman what to do
5. The person Naaman first went to for healing
7. The number of times Naaman was told to dip

| | | | | |
|---|---|---|---|---|
| JORDAN | SOLDIER | ELISHA | ISRAEL | ANGRY |
| SEVEN | GIRL | KING | CLEAN | LEPROSY |

The LORD takes pleasure in those who fear Him, in those who hope in His mercy. Psalms 147:11

To find the correct letter in the graph go across the bottom line till you get to the first number in the code (5-4). The Second number indicates the number of rows you need to go up (5-4). 5-4 is the letter "J."

**What did the little girl say Naaman should do to get better?**

2-4 5-3 5-2 5-3 5-2 3-4 5-5

1-2 3-2 5-3 1-2 3-4 5-5 5-2 4-4 4-3

4-4 4-2 3-2, 1-5 5-5 2-3



**What did the prophet tell Naaman to do?**

3-1 1-5 4-2 3-4 4-4 4-3 5-4 5-3 3-2 4-5 1-5 4-3

4-2 5-5 2-1 5-5 4-3 5-2 4-4 3-3 5-5 4-2

**What happened when Naaman obeyed the prophet?**

3-4 5-5 3-1 1-5 4-2 3-4 5-5 1-5 2-3 5-5 4-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | A | B | C | D | E |
| 4 | F | G | H | I | J |
| 3 | K | L | M | N | O |
| 2 | P | Q | R | S | T |
| 1 | U | V | W | X | Y |
| | 1 | 2 | 3 | 4 | 5 |

## NAAMAN'S LEPROSY IS HEALED (2 KINGS 5:1-14)

***CIRCLE THE CORRECT WORDS:***

1. "(HEYMAN, NAAMAN), commander of the army of the king of Syria, was a great and honorable man in the eyes of his master, because by him the LORD had given victory to Syria." 2 KINGS 5:1
2. "He was also a mighty man of valor, but he was a (LEPER, PEPPER)." 2 KINGS 5:1
3. "Then she said to her mistress, 'If only my master were with the prophet who is in Samaria! For he would (HEAL, PEEL) him of his leprosy.' " 2 KINGS 5:3
4. "So the king of Syria said, 'Go now, and I will send a (LETTER, CHARIOT) to the king of Israel.' " 2 KINGS 5:5
5. "Naaman became (EXCITED, FURIOUS), and went away and said, 'Indeed, I said to myself, "He will surely come out to me." ' " 2 KINGS 5:11

***TRUE OR FALSE:***

6. "The Syrians had gone out on raids, and had brought back captive a young girl from the land of Israel. She waited on Naaman's wife." 2 KINGS 5:2 (TRUE/ FALSE )
7. And it happened, when the king of Israel read the letter, he rejoiced because he could heal Naaman of his leprosy! 2 KINGS 5:7 (TRUE/ FALSE )
8. Elisha sent a messenger to Naaman, saying, "Go and wash in the Jordan seven times, and your flesh shall be restored to you, and you shall be clean." 2 KINGS 5:10 (TRUE/ FALSE )
9. "And his servants came near and spoke to him, and said, 'My father, if the prophet had told you to do something great, would you not have done it? How much more then, when he says to you "Wash, and be clean"?' " 2 KINGS 5:13 (TRUE/ FALSE )
10. "So he went down and dipped seven times in the Jordan, according to the saying of the man of God; and his flesh was restored like the flesh of a little child, and he was clean." 2 KINGS 5:14 (TRUE/ FALSE )

***Note :*** Submit the answers of Bible Quiz to Pastor uncle on or before 25th of every month.

## The New Hope

Welcoming you all in this New Year, in the name of our Lord and Savior Jesus Christ!! Let's thank our Lord whole heartedly for this new blessed year 2021. We seem to be more precious in his eyes for his grace is abundant. More new hopes await us.

New Hope - An ugly caterpillar to a beautiful butterfly

To grow into a beautiful butterfly, the butterfly has to cross four stages: Egg, Caterpillar, and Pupa then to a Butterfly.




A butterfly starts its life as a very small, round, or oval or shaped egg. When the egg finally hatches, caterpillars are formed and these caterpillars will start their work and eat the leaf they were born onto. Since they are tiny and cannot travel to a new plant, the caterpillar needs to hatch on the kind of leaf it wants to eat. Caterpillars need to eat so they can grow quickly. When they start eating, they instantly start growing and expanding. They really struggle a lot to develop a new life.

As soon as a caterpillar is done growing and they have reached their full weight, they form themselves into a pupa. From the outside of the pupa, it looks as if the caterpillar may just be resting, but the inside is where all of the action is. Inside of the pupa, the caterpillar is rapidly changing. All organs of a caterpillar have all been changed by the time the pupa is finished, and is now ready for the final stage of a butterfly's life cycle. When in the fourth and final stage of their lives, adult butterflies are constantly on the lookout to reproduce new life.

This is how a caterpillar hopes and struggles, moulds itself as pupa to form a beautiful life. Like a butterfly, even we are waiting for new hope.

**Looking for the blessed hope and glorious appearing of our great God and Savior Jesus Christ. Titus 2 :13**




When we were born as a child in this world, we will not have any worries. But when we start to incubate to this world, wordly pressure or struggles occupies us and this makes us to go away from God. But for us, this may be the testing time, like how a caterpillar struggles to become a pupa. These struggles will not be permanent. This is the time where our Lord is moulding us to become more closer to him through his hope. The new hope always makes us to rejoice in christ. Our only hope should be on our Lord to face all the obstacles. No human or the external world can tackle our problems.

From the scripture, we come to know about many godly people who sought God for his hope. Apostle Paul, during his ministry times he faced lots of tribulations, inspite his hope was on christ. In 1 Tim. 4:10 Paul says,"we have fixed our hope on the living god".

Let our new hope be our Lord in this new year !

**Mrs. Sheeba David**



**கடந்து மாத தூது பத்திரிக்கைகளை படிக்க கீழேயுள்ள இணைப்பை பயன்படுத்திக் கொள்ளவும்.**

***http://www.csitamilabudhabi.org/thoothu/***

# வேத வினாக்கள்

## 1 நாளாகமம் 15 - 29 அதிகாரங்கள்
## (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. கர்த்தராலே வருகிற இரண்டு காரியம் என்னென்ன?
2. பதினான்கு மிருகங்களை பலியிட்டது எதற்காக?
3. ஒரு நாட்டின் பெயரை கொண்டவன். நான் யார்?
4. விவேகமுள்ள யோசனைக்காரன் யார்?
5. ஐந்து எழுத்துக்கள் கொண்ட எங்கள் இருவருக்கும் கடைசி இரண்டு எழுத்து ஒரே எழுத்து. நாங்கள் யார்?
6. அவமதிக்கப்பட்ட நபர் யார்?
7. தாவீதுக்கு அதிகமாக கிடைத்த மரங்கள் எந்த மரங்கள்?
8. கொள்ளை நோயினால் இறந்தது எத்தனை பேர்?
9. தாவீதை விசாரித்த ராஜா யார்?
10. கடலில் இருக்கும் ஒரு உயிரினத்தின் பெயர் எனது பெயரில் உள்ளது நான் யார்?
11. கர்த்தருடைய தூதனின் பட்டயத்திற்கு பயந்தது யார்?
12. தாவிது தன் வாயால் ஒரு நபரின் பெயரை சொன்னார். அந்த நபருக்கு மறு பெயரும் உண்டு. அந்த நபர் யார்?
13. ஒரு மீனின் பெயர், என் பெயரில் உள்ளது. நான் யார்?
14. இரண்டு முறை ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டேன். நான் யார்?
15. கர்த்தருடைய தூதனைக் கண்டு ஒளித்துக் கொண்டது யார்? யார்?
16. கர்த்தர் மனம் மாறியது எங்கே?
17. ஓர் ஆங்கில எழுத்துடன் ஒரு மிருகத்தின் பெயரை சேர்த்தால் என் பெயர் கிடைக்கும். நான் யார்?
18. இரண்டு எழுத்து ராஜா யார்?
19. ஒரு நபருக்கு மூன்று கேள்விகள் வைக்கப்பட்டது. அது எந்த நபருக்கு?
20. எதை சுவிசேஷமாய் அறிவிக்க வேண்டும்?
21. அடுக்கு தொடராக வந்த ஒரு வார்த்தை என்ன?
22. என் நினைவுகள் உன் நினைவுகள் அல்ல என்ற வசனத்திற்கேற்ப நடந்த சம்பவம் எது?
23. இரண்டு எழுத்து கொண்ட ஓர் பட்டணம் எது?
24. தள கர்த்தன் யார்?
25. ஆசாரியனாக அபிஷேகம் பெற்றது யார்?

*26 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு வேதாகமம் முழுவதிலும் இருந்து விடையளிக்கவும்.*

26




27




28




29




30




**குறிப்பு** : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் ஒப்படைக்கவும்.

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

1. காபிரியேல் - லூக்கா 1:19
2. எலிசபெத் - லூக்கா 1:13,30 & மத்தேயு 1:20
3. யோசேப்பு - மத்தேயு 1:9 & லூக்கா 23:50
4. பரலோகத்திற்கு - லூக்கா 2:15
5. ஒன்று - மத்தேயு 1:20
6. மூன்று - மத்தேயு 2:13,19,22
7. தாவீது - லூக்கா 1:32
8. யோவான் - லூக்கா 1:76
9. எலிசபெத், யோவான் - லூக்கா 1:41,61,15
10. யோசேப்பு - மத்தேயு 1:19

11. மரியாள் - லூக்கா 2:19
12. சகரியா - லூக்கா 1:18
13. எலிசபெத்து - லூக்கா 1:42
14. ஏரோது (or) தேவதூதன் - மத்தேயு 2:4 & லூக்கா 2:11
15. யோசேப்பே பயப்படாதே (தவறு) - மத்தேயு 1:20
16. யோவான் - மாற்கு 1:2 (or) மாற்கு 1:4
17. இரட்சணியத்தைக் - லூக்கா 2:32
18. ஜெபம் - லூக்கா 1:10
19. இயேசுவை - லூக்கா 1:31,32
20. ஊழியம் - லூக்கா 1:23
21. சிமியோன் - லூக்கா 2:28
22. ஆபிரகாம் - லூக்கா 1:72
23. வெண்ணெய், தேன் - ஏசாயா 7:15
24. சகரியா - லூக்கா 1:13,14
25. i) நீதி - ஏசாயா 32:16
    ii) தேசபக்தி - 1தீமோ. 4:8
    iii) சிமியோன் - லூக்கா 2:25
26. ராகாப் - மத்தேயு 1:5
27. உன் ஆத்துமாவையும், ஒரு பட்டயம் உருவிப் போகும் - லூக்கா 2:35
28. பண்டிகை - லூக்கா 2:41
29. சகரியா - லூக்கா 1:20
30. எழுத்துப்பலகை - லூக்கா 1:63

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mr. Nimalan Gnanaraj .P.
2. Mrs. Sharmila Rajesh
3. Mrs. Sheeba David
4. Mrs. Sheeba Merlin (Nov. & Dec)
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Dr. Ashiba Isaac Eban
7. Mrs. Jansi Rajkumar
8. Mrs. Shobha Grapeson
9. Mrs. Janet Vinodh
10. Mrs. Manuel Sarah Foulkes Moore
11. Mr. David
12. Mrs Subija Jino
13. Mrs. Percia David
14. Mrs. Vanitha Nelson

## Children who answered December - 2020 Quiz

1. Abryan Gabriel Jeyaseelan
2. Adelyn Victoria Jeyaseelan
3. Abner Grapeson
   (June – Sep & Dec)
4. Keren Grapeson
   (June – Sep & Dec)
5. Jeya Joshua Maher
6. Jessica Eban
7. Geoffrey Jerome David
8. Jerilyn Pushpam Nelson

## தொப்பியில் கூழ் வாங்கி குடித்து சிவகாசியில் ஊழியம் செய்த
## அருட்திரு. தாமஸ் கெஜிட்டன் ராக்லாண்ட்



**16-04-1815 – 22-10-1858**

**உலகம் போற்றும் ஜெபவீரன்**

ஜெபிக்கும் பழக்கம் ராக்லாண்டின் சிறுவயதிலே வெளிப்பட்டது. இவருடைய மைத்துனனும், கல்லூரியில் உடன் மாணவருமான W.S.டுமர்கு இவ்வாறு குறிப்பிடுகிறார். "ஊக்கந்தளராத ஜெப வாழ்க்கையே இவருடைய சிறந்த குணமாய்க் காணப்பட்டது. இச்சிறந்த குணம் இவருடைய சிறுவயது தொடங்கி மரணத்தின் கடைசி நேரம் வரை வெளிப்பட்டது."

கல்லூரி நாட்களில், ஒவ்வொரு நாளையும் ஜெபத்திலே ஆரம்பித்து ஜெபத்திலே முடித்தார். எந்த ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னும் கடவுளிடம் ஜெபத்திலே ஆலோசனை பெற்ற பின்பே அதைச் செயல்படுத்த முயல்வார். "ஜெபத்தின் இரகசியத்தை, வெற்றியை ராக்லாண்டிடம் கற்றுக்கொண்டேன். எந்த விதமான பிரச்சனைகளுக்கும் சற்று நேரம் ராக்லாண்ட் முழங்காலில் நின்ற பிறகு, அந்தப் பிரச்சனைகள் மறைந்து விடும். எந்த ஒரு காரியத்தை பகிர்ந்து கொள்வதற்கு முன்னும் சற்று நேரம் முழங்காலில் ஜெபத்திலே தரித்திருந்து கடவுளுடைய ஆலோசனைகளைப் பெற்ற பின்பே எங்களிடம் அதை பகிர்ந்து கொள்வார்" என்று அவருடன் சேர்ந்து ஊழியம் செய்த ஃபென் கூறுகிறார்.

"கர்த்தருக்கு பயப்படுகிற குணம், இடைவிடாத ஜெபம் என்ற இரண்டு குணங்களே, அவருடைய குணங்களில் மிகச் சிறந்தனவாய் மேலோங்கி நின்றன. இந்த இரண்டு பழக்கங்களை மிகவும் எளிதாய்த் தன்னுடைய வாழ்க்கையில் செயல்படுத்துகிற ராக்லாண்ட் போன்ற ஒரு மனிதரை இதுவரை நான் பார்த்ததில்லை" என்று T.T.பெரோன் (T.T.Perowne) கூறுகிறார்.

சென்னையிலுள்ள சி.எம்.எஸ்.மிஷன் சிற்றாலயத்தில் நடைபெற்ற துக்க நிவிர்த்திக் கூட்டத்தில் பேசிய சென்னைப் பேராயர், ராக்லாண்டை பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார். "நம்முடைய அருமைச்சகோதரன் ராக்லாண்ட், இயேசுவைப் பற்றி அறியாத மக்களுக்கு இயேசுவைப் பற்றி அறிவிக்க வேண்டும் என்ற தன்னுடைய மேலான நோக்கத்திற்காகத் தனக்குரிய எல்லாவற்றையும் குறிப்பாக தன்னுடைய வாழ்க்கை, சுகம், அந்தஸ்து, செல்வாக்கு ஆகியவற்றை இயேசு கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து விட்டார்".

வட திருநெல்வேலிப் பகுதியில் உள்ள எல்லா இடங்களிலும் ராக்லாண்ட் முழங்காலில் நின்று ஜெபித்திருக்கிறார். அவர் முழங்காலில் நின்று ஜெபிக்காத ஊர், கிராமம் எதுவும் வட திருநெல்வேலியில் இல்லை. இந்த ஜெபங்கள் தாம், அவர் மரித்தவுடனே 1860-ம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு பெரிய ஆன்மீக மறுமலர்ச்சியைக் கொண்டு வந்து அநேக மக்களை கிறிஸ்து இயேசுவுக்கென்று சொந்தமாக்கியது. இன்னும் ராக்லாண்டின் பணி நிறைவுபெறவில்லை. ராக்லாண்டின் பணி வட திருநெல்வேலி மக்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**மனதுருக்கமுள்ள ராக்லாண்ட்**

ராக்லாண்ட் கிறிஸ்துவின் மனதுருக்கத்தை முழுவதுமாய் வட திருநெல்வேலிப் பகுதியில் வெளிப்படுத்தினார். வட திருநெல்வேலிப் பகுதியின் மக்களைக் கண்டு மனதுருகினதின் விளைவே 'வடதிருநெல்வேலி சுற்றித் திரிந்து நற்செய்தி அறிவிக்கும் முறை' என்ற சிறப்பான திட்டம் ராக்லாண்ட் மூலம் வெளிப்படக் காரணமாயிற்று. வட திருநெல்வேலியில் பிரமாணர்களாலும், மேல் ஜாதியினர் என்று தங்களை எண்ணிக் கொண்ட மக்களாலும், ஜமீன்தார்களாலும் அடிமைகளாக நடத்தப்பட்ட மக்களைக் கண்டு மனதுருகி ஒரு பெரிய சமுதாய மாற்றத்திற்கு அடித்தளமிட்டார். மக்களைக் காணும்பொழுது அன்போடு, கரிசனையோடு இயேசுவைப் பற்றிப் பகிர்ந்து கொண்டார். ஒரு மனிதனைக் கூட விடாமல் எல்லோருக்கும் கைப்பிரதிகளைக் கொடுப்பதில் மிகவும் கவனமாயிருந்தார். ஆண்களிடம் பேசும்பொழுது, தன் வலது கையை அவர்கள் தோளின் மேல் வைத்து இயேசுவைப் பற்றி பகிர்ந்துகொண்டார். ராக்லாண்ட் உயிரோடு இருக்கும்பொழுது ஜாதிப் பாகுபாட்டாலும், மனிதர்களைப் பற்றிய பயத்தாலும் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், ராக்லாண்ட் மரித்த பின் இயேசுவை ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கு பெற்று, தாழ்ந்த ஜாதி மக்கள் என்று எண்ணப்பட்ட மக்களோடு ஒன்றாக அமர்ந்து ஆராதனைகளில் பங்கு கொண்டார்கள். காரணம் என்னவென்றால், ராக்லாண்ட் அவர்கள் கனவில் தோன்றி, எப்படி அவர் உயிரோடிருக்கும் பொழுது அவர்கள் தோளின் மேல் தன் கையை வைத்து மனதுருக்கத்தோடு இயேசுவைப் பற்றிச் சொன்னாரோ அதே போன்ற காட்சியை மீண்டும் கண்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.

- **தொடரும்**



**இம்மானுவேலின் இரத்தத்தால் (பாமாலை 331)**
(There is a Fountain filled with blood)

***இம்மானுவேலின் இரத்தத்தால்***
***நிறைந்த ஊற்றுண்டே***
***எப்பாவத்தீங்கும் அதனால்***
***நிவிர்த்தியாகுமே.***

***"அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்".***
***சகரியா 13 : 1***

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெறுமுன், பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து, அதின் ரத்தத்தைக் கதவு நிலைகளில் தெளித்ததினால், சங்கார தூதனால் ஏற்படவிருந்த மரணத்திற்குத் தப்பினார்கள். பரிசுத்த நற்கருணையில் நாம் பங்குபெறும்போது நமக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நமது சரீரமும் ஆத்துமாவும் நித்திய ஜீவனுக்கென்று காக்கப்படுகின்றன; ஆகவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம், மனுக்குலத்தின் சகல பாவங்களையும் கழுவி, நம்மைச் சுத்திகரிக்க வல்லது. 'இம்மானுவேலின் இரத்தத்தால்' என்னும் இப்பாடல், மேற்கூறிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

இப்பாடலை எழுதிய வில்லியம் கூப்பர் (William Cowper), 1731ம் ஆண்டு, நவம்பர் மாதம், 26ம் தேதி இங்கிலாந்தில் பெர்க்கம்ஸ்டெட் கிராமத்தில் பிறந்தவர். அவரது தந்தை, இரண்டாம் ஜார்ஜ் மன்னருக்கு அரண்மனை குருவாக (Chaplain) இருந்தவர். ஆறு வயதிலேயே கூப்பர் தன் தாயாரை இழந்தார். வெஸ்ட்மினிஸ்டர் பள்ளியில் பயின்று, பின்னர் சட்டப்படிப்புக்கு அனுப்பப்பட்டார். இதில் தேறிய பின், மூன்று ஆண்டுகள் ஒரு பிரபல வழக்கறிஞரிடம் பயிற்சி பெற்று, பிரிட்டிஷ் பாராளுமன்ற பிரபுக்கள் சபையில் ஒரு எழுத்தராக அமர்ந்தார். இவ்வேலை அவருக்கு அச்சத்தை உண்டாக்கியதால், புத்தி சுவாதீனத்தை இழந்து, தூய அல்பான்ஸ் மருத்தவ நிலையத்தில் சேர்க்கப்பட்டார்.

இங்கு சிகிச்சை பெற்று வரும்போது, 1763ம் ஆண்டு எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி அவர் வாழ்க்கையில் நேரிட்டது. ஒருநாள் அங்குள்ள தோட்டத்தில் அவர் உலாவிக்கொண்டிருக்கையில், அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு திறந்த வேதபுத்தகத்தைக் கண்டு, அதில் யோவான் சுவிசேஷம் பதினொன்றாம் அதிகாரத்தை வாசிக்கலானார்.

மரித்துப்போன லாசருவை உயிரோடெழுப்பிய ஆண்டவர், மனச்சோர்வுடன் இருந்த தம்மையும் உயிர்ப்பிக்கக்கூடும் என்னும் நம்பிக்கை அவர் மனதில் உதித்தது. வேதபுத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கையில், ரோமர் நிருபத்தில், மூன்றாம் அதிகாரத்தில், நாம் கிறிஸ்துவின் ரத்தத்தினால் மீட்கப்படுகிறோம் என்று எழுதப்பட்டிருப்பதை வாசித்து, ஆண்டவரின் பேரில் பூரண விசுவாசமடைந்தார். அவரது ஆத்தும நோயைப் போக்கிய ஆண்டவர், சரீர நோயையும் குணப்படுத்தினார். அவரது சித்த நோய் குணமானதைக் கண்டு மருத்துவர்கள் வியப்புற்றனர்.

மருத்துவ நிலையத்திலிருந்து வெளியேறிய பின், அவர் ஆல்னே நகரத்தில் மேரி அம்மையாரின் வீட்டில் வசிக்கலானார். இங்கிருக்கும்போது, ஜான் நியூட்டன் போதகருடன் நட்பு கொண்டு, இருவரும் சேர்ந்து ‘ஆல்னே பாடல்கள்’ என்னும் பாட்டுப்புத்தகத்தை உருவாக்கினர். இதில் கூப்பர் அறுபத்தேழு பாடல்கள் எழுதியுள்ளார். இப்பாடல்கள், ‘கிறிஸ்தவ சபையின் பொக்கிஷங்கள்’ எனப்போற்றப்படுகின்றன. அவர் எழுதிய இதர பாடல்களில் பிரபலமானவை, ‘பாவி கேள் உன் ஆண்டவர்’, ‘கர்த்தாவின் அற்புதச் செய்கை’, O for a closer walk with God’ என்பன. ‘இம்மானுவேலின் இரத்தத்தால்’ என்னும் பாடல் 1770ல் எழுதப்பட்டது. இரட்சணியச் சேனையார் இப்பாடலுடன், ‘மா மகத்துவ ஊற்றே, எனக்காய்ப் பாய்ந்திடு’ எனப்பொருள் கொள்ளும், O glorious fountain, open now for me’ என்னும் பல்லவியையும் சேர்த்துப் பாடுகின்றனர்.

பிரபல சுவிசேஷப் பிரசங்கியாராகிய மூடி போதகரையும், சுவிசேஷப் பாடகராகிய சாங்கி பாடகரையும் முதல் முதலாக ஒன்றாக இணைத்தது இந்தப் பாடல்தான். அமெரிக்காவில் இண்டியானாப் போலிஸ் நகரத்தில், மூடி போதகர் நடத்திய ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் பாட்டுகள் ஆரம்பிக்கத் தகுந்த ஆட்கள் இல்லாததால், கூட்டத்துக்கு வந்திருந்த சாங்கியை ஒரு பாட்டு ஆரம்பிக்கும்படி ஒரு நண்பர் ஏவவே, அவர், ‘இம்மானுவேல் இரத்தத்தால் ‘என்னும் பாடலை உரத்த சத்தமாய் ஆரம்பிக்க, எல்லோரும் உற்சாகமாகப் பாடினர். கூட்டம் முடிந்தவுடன், மூடி போதகர் பாட்டு ஆரம்பித்தவர் யார் என விசாரித்து, சாங்கியிடம் வந்து, பேசத் துவங்கினார். இதன் விளைவாகச் சாங்கி தம் அரசாங்க வேலையை விட்டு, சுவிசேஷப் பாடகராக மூடி போதகருடன் சென்றார்.

கூப்பர் 1800ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 25ம் தேதி தமது 69ம் வயதில் காலமானார். அவர் ஆண்டவரின் அன்பை நன்குணர்ந்த ஒரு பக்தன்; தூய்மையான உள்ளம் படைத்தவர்; கவித்திறனுள்ளவர். அவர் எழுதிய அநேக பாடல்களினால் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

# INTERESTING FACTS FROM THE BIBLE



**In the BIBLE there are :-**

| | |
|---|---|
| Books of the Bible | 66 |
| Books of the Old Testament | 39 |
| Books of the New Testament | 27 |
| Middle Book of the Old Testament | Proverbs |
| Middle Book of the New Testament | 2 Thessalonians |
| Old Testament | 23,214 Verses |
| New Testament | 7,959 Verses |
| Middle verse of the Bible | Psalms 118:8 |
| Verse containing all alphabets except 'J' | Ezra 7:21 |
| Verse containing all alphabets except 'Q' | Daniel 4:37 |
| Words occurring only once in the Bible | • Eternity [Isaiah 57:15]<br>• Grandmother [2Timothy 1:15]<br>• Gnat [Matthew 23:24] |
| Shortest verse of the Old Testament | 1 Chronicles 1:25 |
| Shortest verse of the New Testament | "Jesus Wept" [John 11:35] |
| Longest word in the Bible (18 Letters) | Maher-Shalal-hash-baz (Isaiah 8:1) |

*தொகுப்பு : திருமதி. ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்*

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் ஜனவரி – 2021

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு (online) |
| 7 | வியாழன் | 9.00 pm - 10.30 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 8 | வெள்ளி | 12.00 noon- 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை (online) |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு (online) |
| 14 | வியாழன் | 9.00 pm - 10.30 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 19 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு (online) |
| 21 | வியாழன் | 9.00 pm - 10.30 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு (online) |
| 28 | வியாழன் | 9.00 pm - 10.30 pm | தூய ஆராதனை – St.Andrew's church |

ஆலய ஆராதனைகளில் பங்குகொள்ள கீழ்க்காணும் இணைப்பின் மூலம் முன்பதிவு செய்துகொள்ளவும்.

*http://www.csitamilabudhabi.org/attend-church-service-booking/*

# BIBLE READING FOR CHILDREN – JANUARY 2021



| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.01.21 | EZEKIEL | 12 : 1 – 16 |
| 2.01.21 | EZEKIEL | 12 : 17 – 28 |
| 3.01.21 | EZEKIEL | 13 : 1 – 16 |
| 4.01.21 | EZEKIEL | 13 : 17 – 23 |
| 5.01.21 | EZEKIEL | 14 : 1 - 11 |
| 6.01.21 | EZEKIEL | 14 : 12 – 23 |
| 7.01.21 | EZEKIEL | 15 : 1 – 8 |
| 8.01.21 | EZEKIEL | 16 : 1 – 22 |
| 9.01.21 | EZEKIEL | 16 : 23 – 34 |
| 10.01.21 | EZEKIEL | 16 : 35 – 43 |
| 11.01.21 | EZEKIEL | 16 : 44 – 52 |
| 12.01.21 | EZEKIEL | 16 : 53 – 58 |
| 13.01.21 | EZEKIEL | 16 : 59 – 63 |
| 14.01.21 | EZEKIEL | 17 : 1 – 10 |
| 15.01.21 | EZEKIEL | 17 : 11 – 24 |
| 16.01.21 | EZEKIEL | 18 : 1 – 10 |
| 17.01.21 | EZEKIEL | 18 : 11 – 20 |
| 18.01.21 | EZEKIEL | 18 : 21 – 32 |
| 19.01.21 | EZEKIEL | 19 : 1 – 14 |
| 20.01.21 | EZEKIEL | 20 : 1 – 15 |
| 21.01.21 | EZEKIEL | 20 : 16 – 32 |
| 22.01.21 | EZEKIEL | 20 : 33 – 44 |
| 23.01.21 | EZEKIEL | 20 : 45 – 49 |
| 24.01.21 | EZEKIEL | 21 : 1 – 17 |
| 25.01.21 | EZEKIEL | 21 : 18 – 27 |
| 26.01.21 | EZEKIEL | 21 : 28 – 32 |
| 27.01.21 | EZEKIEL | 22 : 1 – 16 |
| 28.01.21 | EZEKIEL | 22 : 17 – 22 |
| 29.01.21 | EZEKIEL | 22 : 23 – 31 |
| 30.01.21 | EZEKIEL | 23 : 1 – 21 |
| 31.01.21 | EZEKIEL | 23 : 22 – 35 |

**கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; சங்கீதம் 84:11 b**

## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - ஜனவரி 2021



| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | சங்கீதம் 81 : 1 – 16 | மீகா 1 : 10 – 16 |
| 2 | சனி | சங்கீதம் 82 : 1 – 8 | மீகா 2 : 1 – 13 |
| 3 | ஞாயிறு | சங்கீதம் 83 : 1 – 18 | மீகா 3 : 1 – 12 |
| 4 | திங்கள் | சங்கீதம் 84 : 1 – 12 | மீகா 4 : 1 – 13 |
| 5 | செவ்வாய் | சங்கீதம் 85 : 1 – 13 | மீகா 5 : 1 – 15 |
| 6 | புதன் | சங்கீதம் 86 : 1 – 17 | மீகா 6 : 1 – 16 |
| 7 | வியாழன் | சங்கீதம் 87 : 1 – 7 | மீகா 7 : 1 – 7 |
| 8 | வெள்ளி | சங்கீதம் 88 : 1 – 18 | மீகா 7 : 8 – 20 |
| 9 | சனி | சங்கீதம் 89 : 1 – 18 | நாகூம் 1 : 1 – 14 |
| 10 | ஞாயிறு | சங்கீதம் 89 : 19 – 37 | நாகூம் 2 : 1 – 13 |
| 11 | திங்கள் | சங்கீதம் 89 : 38 – 52 | நாகூம் 3 : 1 – 19 |
| 12 | செவ்வாய் | சங்கீதம் 90 : 1 – 17 | ஆபகூக் 1 : 1 – 11 |
| 13 | புதன் | சங்கீதம் 91 : 1 – 16 | ஆபகூக் 1 : 12 – 17<br>ஆபகூக் 2 : 1 – 4 |
| 14 | வியாழன் | சங்கீதம் 92 : 1 – 15 | ஆபகூக் 2 : 5 – 20 |
| 15 | வெள்ளி | சங்கீதம் 93 : 1 – 5 | ஆபகூக் 3 : 1 – 10 |
| 16 | சனி | சங்கீதம் 94 : 1 – 23 | ஆபகூக் 3 : 11 – 19 |
| 17 | ஞாயிறு | சங்கீதம் 95 : 1 – 11 | செப். 1 : 1 – 18 |
| 18 | திங்கள் | சங்கீதம் 96 : 1 – 13 | செப். 2 : 1 – 15 |
| 19 | செவ்வாய் | சங்கீதம் 97 : 1 – 12 | செப். 3 : 1 – 13 |
| 20 | புதன் | சங்கீதம் 98 : 1 – 9 | செப். 3 : 14 – 20 |
| 21 | வியாழன் | சங்கீதம் 99 : 1 – 9 | ஆகாய் 1 : 1 – 15 |
| 22 | வெள்ளி | சங்கீதம் 100 : 1 – 5 | ஆகாய் 2 : 1 – 14 |
| 23 | சனி | சங்கீதம் 101 : 1 – 8 | ஆகாய் 2 : 15 – 23 |
| 24 | ஞாயிறு | சங்கீதம் 102 : 1 – 14 | சகரியா 1 : 1 – 17 |
| 25 | திங்கள் | சங்கீதம் 102 : 15 – 28 | சகரியா 1 : 18 – 21<br>சகரியா 2 : 1 - 5 |
| 26 | செவ்வாய் | சங்கீதம் 103 : 1 – 22 | சகரியா 2 : 6 – 13 |
| 27 | புதன் | சங்கீதம் 104 : 1 – 18 | சகரியா 3 : 1 – 10 |
| 28 | வியாழன் | சங்கீதம் 104 : 19 – 35 | சகரியா 4 : 1 – 10 |
| 29 | வெள்ளி | சங்கீதம் 105 : 1 – 23 | சகரியா 5 : 1 – 11 |
| 30 | சனி | சங்கீதம் 105 : 24 – 45 | சகரியா 6 : 1 – 15 |
| 31 | **ஞாயிறு** | **சங்கீதம் 106 : 1 – 25** | சகரியா 7 : 1 – 14 |

**உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்கீதம் 84:11 c**

# ஆராதனை பாடல்கள் - ஜனவரி 2021



| 07-01-21 | |
|---|---|
| பாமாலை - 3 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை - 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 187 | தந்தேன் என்னை இயேசுவே |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் |
| **14-01-21** | |
| பாமாலை - 22 | தூய தூய தூயா சர்வ வல்ல |
| பாமாலை - 324 | பாதை காட்டும் மா யெகோவா |
| கீர்த்தனை – 208 | ஏற்றுக்கொண்டருளுமே தேவா |
| கீர்த்தனை – 317 | அனுக்ரக வார்த்தையோடே |
| **21-01-21** | |
| பாமாலை - 10 | போற்றிடு ஆன்மமே சிஷ்டி |
| பாமாலை - 326 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை – 189 | என்னை ஜீவபலியாய் |
| பாமாலை – 37 | ஞான நாதா வானம் பூமி |
| **28-01-21** | |
| பாமாலை - 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை - 347 | தெய்வ ஆட்டுக்குட்டியே |
| கீர்த்தனை – 105 | தேன் இனிமையிலும் ஏசுவின் |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து அந்தகாரம் |

துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; சங்கீதம் 18:3a
சங்கீதம் 18:3a

## திருமறை பாட ஒழுங்குகள் - ஜனவரி 2021

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 07-01-21 | விடுதலைக்கான வெளிப்பாடு | ஏசாயா 61 :1 – 11 | வெளி. 5:1 – 10 | லூக்கா 4:16 – 21 | 76 |
| 14-01-21 | அழைப்பிற்கு தகுதியானவன் | நீதி. 20 :1 – 11 | ரோமர் 6 :12– 21 | மத்தேயு 7: 16 – 23 | 14 |
| 21-01-21 | ஒரே கர்த்தர், ஒரே ஞானஸ்நானம் | எண்ணாகமம் 11 :23 –30 | 1கொரி. 10 :1 –4 | யோவான் 10:7 – 18 | 23 |
| 28-01-21 | நீதி மற்றும் அமைதிக்கான ஒற்றுமை | எசேக்கியேல் 37 : 15 - 28 | பிலிப்பியர் 4 :8 - 20 | 5 : 21 - 26 | 4 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக்குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | |
|---|---|---|
| 05-01-21 | சங்கீதம் | 1 |
| 12-01-21 | சங்கீதம் | 2 : 1 – 6 |
| 19-01-21 | சங்கீதம் | 2 : 7 – 12 |
| 26-01-21 | சங்கீதம் | 3 |

துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; சங்கீதம் 18:3a
சங்கீதம் 18:3a

# BIRTHDAY - JANUARY 2021




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mrs. | Annie Shelton Sam |
| 6 | Mrs. | Ezhil |
| 7 | Mr. | Selvin Samuel |
| 8 | Ms. | Joanna R.S. |
| 9 | Mrs. | Angelin Prasanna |
| 9 | Master | Vimal Melwyn. R |
| 10 | Mrs. | Thamarai Selvi |
| 11 | Mr. | Paul Emerson Karunakaran |
| 11 | Master | Noel Navneeth Felix |
| 12 | Ms. | Dhini Shekinah Albert |
| 12 | Mrs. | Nanthini Rajkumar |
| 13 | Ms. | Joanna Paul Jino |
| 13 | Mrs. | Ruby Sahaya Selvan |
| 15 | Mr. | Judson Sundaradhas |
| 15 | Ms. | Johanna Esther |
| 16 | Mrs. | Adeline Crishanth |
| 17 | Dr.Mrs. | Savitha Rajakumar |
| 17 | Mr. | Neville Sam |
| 17 | Mrs. | Sherin Paul |
| 19 | Ms. | Joha Anit Manuel |
| 20 | Mrs. | Milcah Swarnalatha David |
| 20 | Mrs. | Epsy Janet Bai |
| 20 | Master | Jershan Selva Shaji |
| 21 | Mrs. | Princy Catherine |
| 21 | Mrs. | Amirthamani |
| 22 | Mr. | Albert Raj T |
| 22 | Master | Andrew Sam Viknesh |
| 23 | Master | Giftus Samuel |
| 24 | Ms. | Caron Sylvia |
| 24 | Mrs. | Mano Ranjini |
| 25 | Master | Navin Packiraj Godwin |
| 25 | Mrs. | Vidhya Jebas |
| 25 | Mr. | Jebakumar Benjamin |
| 26 | Mr. | David Ravikumar J |
| 26 | Mr. | Galvin Robert |
| 28 | Master | Ricky Sam. R |
| 29 | Mr. | Dhas Devavaram Jackson |
| 29 | Baby | Johan Sam Manuel |
| 30 | Ms. | Elizabeth Miraclyn |
| 30 | Mr. | Willingdon Madhuram |
| 30 | Mrs. | Juliet Vanitha |
| 31 | Mrs. | Agnes Regini Arun |
| 31 | Master | Abner Allan |

அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன் சங்கீதம் 18:3b

# WEDDING ANNIVERSARY – JANUARY 2021




| Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mrs. & Mr. | Ruban Thiruthuvaraj. G |
| 3 | Mrs. & Mr. | Davidson. P |
| 3 | Mrs. & Mr. | Melwin Joseph |
| 4 | Mrs. & Mr. | Solomon Susinder |
| 5 | Mrs. & Mr. | Raja. A.K |
| 6 | Mrs. & Mr. | Renald Daniel R |
| 6 | Mrs. & Mr. | Vignesh |
| 11 | Mrs. & Mr. | Jacob Raj. J |
| 17 | Mrs. & Mr. | Dhas Devavaram Jackson |
| 19 | Mrs. & Mr. | Praveen Sharon |
| 22 | Mrs. & Mr. | Samuel Bhaskar W |
| 23 | Mrs. & Mr. | Neville Sam |
| 23 | Mrs. & Mr. | Naveen Chandran |
| 25 | Mrs. & Mr. | Vimal Mohan |
| 26 | Mrs. & Mr. | Yuvesh Ray |
| 26 | Mrs. & Mr. | Rajan Sagariya Nadar |
| 31 | Mrs. & Mr. | Dinakaran |
| 31 | Mrs. & Mr. | Sahaya Selvan |

# NEW ARRIVAL



இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Jahziel Brayden | Mr.Max Jeevin & Mrs. Silvia Annie |
| 2 | Jaylan Paul Jino | Mr. Jino Justin Joseph & Mrs. Subija Jino |

நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; எபிரெயர் 10:23a

# COMMITTEE MEMBERS – 2020-22


Mr. Ranjith Kumar Jacob
Secretary


Rev. Jeri Rajkumar
President


Mr. Anti Grapeson
Vice president


Mr. Jeya Mahaer Joseph Jeyaseelan
Warden


Mr. Nithiya Kirubakaran Thavamoney
Treasurer


Mr. Samuel Vetha Jebaraj Chandra
Warden


Dr. Ashibha Isaac Eban
Member


Mr. Arul Sugirson Samuel
Member


Mr. Carmel Beeshow Gabriel
Member





Mr Selva Shaji Selvin Chandran
Member


Mr Felix Dayamoni
Member

# Junior Church Christmas Tree Program







HAPPY NEW YEAR 2021
I (GOD)
KNOW THE PLANS
TO GIVE YOU
HOPE AND
A FUTURE.
JEREMIAH 29:11